நாங்கள் இருக்கின்றோம் நாங்கள் இருக்கின்றோம்
நம்பிக்கையோடு காய்களை நகர்த்துங்கள் 2
வேராக நீங்கள் இருப்பதால் ஊற்றாக வருகின்றோம்
விதையாக நீங்கள் விளைவதால் விழுதாக வருகின்றோம்

நீர் பாச்சி பயிரை வளத்தவர் நீங்களே குருதி
நீர் பாச்சி மண்ணைக் காப்பார் நீங்களே
ஒரு வீட்டு பிள்ளைகளாய் கலந்தவர் நீங்களே
இன்று ஒரு நாட்டு பிள்ளைகளாய் கலந்தவர் நீங்களே

ஏழு கண்டங்களும் எழுந்து கேட்கட்டும்
எல்லா நாடுகளும் ஏறிட்டு பார்க்கட்டும்
அடுத்த நூற்றாண்டிலும் தொடரும் போரிது
எல்லா நூற்றாண்டிலும் எழுந்து போரிது

வீண்போகாது வீண்போகாது
கண்ணீரும் கனவுகளும் வீண்போகாது
சிறுவர்களின் விடுதலைப் போர் நாட்டை மீட்கும்
சிறுத்தைகளின் உயிர் படை மானம் காக்கும்
இந்த மண்ணிற்கும் அந்த விண்ணிற்கும்
தெரிந்த உண்மையிது
அதிகார வர்க்கமும் சதிகார வர்க்கமும்
மறந்த உண்மையிது